தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

**I. D. No. 5/2022**

தொ. சா.2

2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03-ம் நாள் மனுதாரரின் சாட்சியம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) கிரேடு-I பெஞ்ச் கிளார்க் திருமதி. N. சித்ரா அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | மனோகரன் | தந்தையின் பெயர் |
| வயது | | ஜாதி, மதம் |
| கிராமம் | | ஊர் |
| வட்டம் | | தேதி |

முதல் விசாரணை :- (அழைப்பணையின் பேரில் சாட்சி நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்) எனது பெயர் மனோகரன். நான் பெரம்பலூரில் குடியிருந்து வருகிறேன். அது சம்பந்தமாக என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) தாக்கல் செய்கிறேன். அது Ex. W. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீங்கள் 1-ம் எதிர்மனுதாரரிடம் வேலைக்கு சேர்வதற்கு முன்பு எங்கு வேலை பார்த்தீர்கள் என்றால் ராணுவத்தில் அலில்தாராக வேலை பார்த்து வந்தேன். அப்படிடி என்றால் ஓய்வுக்கு பிறகு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சேர்ந்தீர்களா என்றால் ஆமாம் 2008-ல் வேலைக்கு சேர்ந்தேன். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முதன் முதலில் எங்ககு வேலை கொடுத்தார்கள் என்றால் பெரம்பலூரில் உள்ள டாஸ்மார்க் மடெப்போவில் வேலை கொடுத்தார்கள். அதன் பிறகு எங்கு வேலைக்கு சென்றீர்கள் என்றால் நானாக கேட்டு வாங்கி பெரம்பலூர் ஆவின் குளிரூட்டும் நிலையத்தில் செக்யூரிட்டியாக வேலை பார்த்தேன். உங்களுடம் வேறு யார் யார் வேலை பார்த்தார்கள் என்றால் கருப்பண்ணன் மற்றும் அன்புமணி ஆகியோர் வேலை பார்த்தனர். சாட்சியடிம் ஆவணத்தை காண்பித்து

இது தான் உங்கள் மூவருக்கும் பராமரிக்கப்படும் வருகை பதிவேடா என்று கேட்க சாட்சி அதை பார்த்து ஆமாம் என்றார் அந்த வருகை பதிவேட்டின் Extract Ex. W. 20. நீங்கள் ஆவினில் வேலை பார்க்கும் போது ஆவினில் புத்தக கண்காட்சி நடத்தினார்களா என்றால் ஆமாம் 27.01.2017-ம் தேதி முதல் 04.02.2017 வரை பெரம்பலூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள நகராட்சி மைதானத்தில் நடத்தினார்கள் அதில் ஆவின் சார்பில் ஸ்டால் வைக்கப்பட்டு இருந்தது அதற்கு நாங்கள் மூவரும் இரவு காவலர் பணியில் சுழற்சி முறையில் பணி பார்த்தோம். அதற்கு ஊதியம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். ஆனால் 3 மாதங்கள் கழித்து அவர்கள் கொடுத்த ஊதியத்தை செப்டம்பர் மாதத்தில் பிடித்து விட்டார்கள் அது சம்பந்தமாக நீங்கள் 1-வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கேட்டீர்களா என்றால் கேட்டோம் ஆனால் அதற்கான சரியான பதில் வரவில்லை. உங்களுக்கு மட்டும் பிடித்தம் செய்தார்களா என்றால் இல்லை வேலை பார்த்த மூவருக்கும் பிடித்தம் செய்தார்கள். நீங்கள் மூவரும் வேலை செய்யும் போது உங்களுக்கு இடையே கருத்து வேறுபாடு இருந்ததா என்றால் இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது
கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு
சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி
என ஒப்புக் கொள்ளப்பட்டது.

தலைமை தாங்கும் அதிகாரி,
தொழிலாளர் நீதிமன்றம்,
திருச்சி.

Adobe